**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.217/2021**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மீனாட்சிநாதன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 13th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்டம், ஐ.யு.சி.ஏ.டப்ளியு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அச்சன்புதூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 04.08.2017 ம் தேதி, காலை 06.30 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி தென்காசி உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களின் மேற்பார்வையில் கள்ள துப்பாக்கிகள் நடமாட்டம் குறித்து ரோந்து செய்து கண்காணித்து வரும்போது, அச்சன்புதூர் – காசிதர்மம் ரோட்டிலுள்ள செவக்காடு விலக்கில் வைத்து மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN-67-Z-6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி வேனை நிறுத்தி சோதனை செய்தபோது, வண்டியில் இருந்த பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ஆழ்வார், த/பெ.துரைச்சாமி, புளியரை, காளிமுத்து, த/பெ.சுப்பையாத்தேவர், காசிதர்மம், குமாரசாமி, மேலகரம் மற்றும்

வாகனத்தை ஓட்டி வந்த டிரைவர் பீர் முகமது ஆகியோர்களை சோதனை செய்ய முற்பட்டபோது, வண்டியிலிருந்து இறங்கிய எதிரி ஆழ்வார் கையில் ஒரு ஒற்றை குழல் துப்பாக்கியுடன் கீழே இறங்கி, வண்டியில் இருந்தவர்களுடன் சேர்ந்து கொண்டு, "இந்த போலீஸ்கார பயல்களுக்கு வேறு வேலை இல்லையா" என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, "எங்களை பிடிக்க வந்தால் சுட்டு கொன்று விடுவோம்" என்று மிரட்டியபோது, நானும் போலீஸ் பார்ட்டி சகிதம் மேற்படி நபர்களை சுற்றி வளைத்து பிடித்து, துப்பாக்கி சம்பந்தமாக ஆழ்வார் என்பவரை விசாரித்தபோது, அவர் எந்தவித துன்புறுத்தலும் இன்றி எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எனக்கு சொந்த ஊர் புளியரை என்றும், எனது அப்பாவிற்கு கள்ள துப்பாக்கி செய்து விலைக்கு கொடுக்கும் தொழில் உண்டு என்றும், தானும் அவருடன் சேர்ந்து துப்பாக்கி தயாரிக்கும் தொழில் தெரிந்து கொண்டதாகவும், எனது அப்பாவின் இறப்பிற்கு பிறகு தான் அந்த தொழிலை செய்து வருவதாகவும், இது சம்பந்தமாக தென்காசி காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது என்றும் கூறினார். பின்னர் தென்காசி நடுப்பேட்டையை சேர்ந்த செய்யது முகமது அப்துல் காதர் ஷெரிப் என்பவரை தெரியும் என்றும், அவர் வழக்கமாக செவல்காட்டிற்கு சென்று மேற்படி 2 முதல் 4 எதிரிகளிடம் வழக்கமாக வனவிலங்குகளை வேட்டையாடி அதில் கிடைக்கும் மிருகங்களை தென்காசியிலுள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வந்து, கறியை பங்கு வைத்து கொடுப்பதாகவும் கூறினார். அதேபோல் 03.08.2017 ம் தேதியன்று தானும், மேற்படி எதிரிகளுடன் அவருக்கு சொந்தமான வெள்ளை நிற ஆம்னி வேனில் ஆளுக்கொரு துப்பாக்கி மற்றும் முகமது உசைன் கொடுத்த கள்ளத்துப்பாக்கிகளையும் கொண்டு செவல்காட்டிற்கு வேட்டைக்கு

செல்வதாகவும், அன்றைய தினம் வேட்டையாடிய மிருகங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், பக்கத்திலுள்ள தோப்பில் இரவு தங்கியிருந்து, காலை காளிமுத்துவை காசிதர்மத்தில் இறக்கி விட்டு செல்லலாம் என்று வந்தபோது, தாங்கள் தங்களை பிடித்து கொண்டதாகவும் கூறினார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளை கைது செய்தும், சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பிறகு எதிரிகள் மற்றும் சொத்துகளுடன் நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.234/2017, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 506(2) மற்றும் 25(1)(A) Arms Act மற்றும் 5 of ES Act–ன் படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2. (எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையான எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்ற ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபனை குறித்து தீர்ப்பின் போது முடிவு செய்யப்படும்). டீலக்ஸ மாடல் ஸ்போர்ட்ஸ்மேன் கால்ஸ் கன் வொர்க்ஸ் 3842–76 என எழுதப்பட்ட ஒற்றை குழல் துப்பாக்கி (SBBL) – 1 மற்றும் தோட்டாக்கள் – 5 கைப்பற்றிய அத்தாட்சி – அ.சா.ஆ.3. ஒற்றைக்குழல் துப்பாக்கி (SBBL) – 1 மற்றும் தோட்டாக்கள் – 5 கைப்பற்றிய அத்தாட்சி – அ.சா.ஆ.4. மசில்லோடு துப்பாக்கி –1, கரிமருந்து பிளாஸ்டிக் பையில் கைப்பற்றப்பட்டது – கொஞ்சம், பழைய நியுஸ் பேப்பரில் சுற்றப்பட்ட ஈய ரவைகள் – கொஞ்சம் கைப்பற்றிய அத்தாட்சி – அ.சா.ஆ.5. 0.22 துப்பாக்கி –1, 0.22 துப்பாக்கி தோட்டா –4, 0.22 துப்பாக்கி கால் தோட்டா –1 கைப்பற்றிய அத்தாட்சி – அ.சா.ஆ.6. TN 67Z 6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி வேன், மசில்லோடு துப்பாக்கி –1, ஏர்கன் –2, தோட்டாக்கள் –8 மற்றும் கத்திகள் –2 மற்றும் ISSO கம்பெனி ஒயருடன்

கூடிய பேட்டரி எலிமிணேட்டர் –1, SUN CAKM கம்பெனி கருப்பு நிற பேட்டரி வெள்ளை நிற ஸ்விட்சுடன் கூடியது –1, KAWASHI CADNIC கம்பெனி நெத்தி லைட் –1, YAGEYG – 3589 கம்பெனி நெத்தி லைட் –1 கைப்பற்றி அத்தாட்சி அ.சா.ஆ.7. டீலக்ஸ மாடல் ஸ்போர்ட்ஸ்மேன் கால்ஸ் கன் வொர்க்ஸ் 3842–76 என எழுதப்பட்ட ஒற்றை குழல் துப்பாக்கி (SBBL) – 1 மற்றும் தோட்டாக்கள் – 5 சா.பொ.1 வரிசை. ஒற்றைக்குழல் துப்பாக்கி (SBBL) – 1 மற்றும் தோட்டாக்கள் – 5 கைப்பற்றிய சா.பொ.2 வரிசை. மசில்லோடு துப்பாக்கி –1, கரிமருந்து பிளாஸ்டிக் பையில் கைப்பற்றப்பட்டது – கொஞ்சம், பழைய நியுஸ் பேப்பரில் சுற்றப்பட்ட ஈய ரவைகள் – கொஞ்சம் – சா.பொ.3 வரிசை. 0.22 துப்பாக்கி –1, 0.22 துப்பாக்கி தோட்டா –3, 0.22 துப்பாக்கி கால் தோட்டா –1 சா.பொ.4 வரிசை. TN 67Z 6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி வேன், மசில்லோடு துப்பாக்கி –1, ஏர்கன் –2, தோட்டாக்கள் –8 மற்றும் கத்திகள் –2 மற்றும் ISSO கம்பெனி ஒயருடன் கூடிய பேட்டரி எலிமிணேட்டர் –1, SUN CAKM கம்பெனி கருப்பு நிற பேட்டரி வெள்ளை நிற ஸ்விட்சுடன் கூடியது –1, KAWASHI CADNIC கம்பெனி நெத்தி லைட் –1, YAGEYG – 3589 கம்பெனி நெத்தி லைட் –1 சா.பொ.5 வரிசை. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலை நீதித்துறை நடுவர் செங்கோட்டைக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் பகல் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சம்பவயிடத்தையும், அதன் சுற்றுபுறத்தையும் சாட்சிகள் தளவாய்ராசு மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவை அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9. பின்னர் சாட்சிகள் பயிற்சி உதவி ஆய்வாளர் திரு.ஆன்டலின் ரமேஷ், காவலர் பழனிவேல்ராஜன், காவலர் ஜெயராமன் மற்றும் தலைமைக்காவலர் கமலக்கண்ணன், காவலர்

பத்மராஜா, சாட்சிகள் தளவாய் ராசு மற்றும் மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.9. பின்னர் நான் பணிமாறுதலில் சென்று விட்டதினால் வழக்கு கோப்பினை அடுத்து பொறுப்பேற்ற ஆய்வாளர் திரு.கே.பாலமுருகனிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

முதல் தகவல் அறிக்கை அச்சன்புதூர் காவல் நிலையத்தில் காலை 11.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக துலங்கும் என்றால் சரிதான். அச்சு முதல் தகவல் அறிக்கை யார் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கையை கொண்டு சென்ற காவலர் பெயர் எனக்கு தெரியவில்லை. அ.சா.ஆ.1ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அச்சன்புதூர் காவல் நிலையத்திலிருந்து செங்கோட்டை நீதிமன்றத்திற்கு அரை மணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் முக்கால் மணி நேரத்தில் சென்று விடலாம். அச்சு முதல் தகவல் அறிக்கை அன்றைய தினம் இரவு 09.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு சென்று அடைந்துள்ளது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கான காரணம் என்னவென்றால் அலுவலக காரணமாக காலதாமதமாகி விட்டது. காவல் நிலையத்திலுள்ள பணிச்சுமை காரணமாக முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதில் காலதாமதமாகி விட்டது. படைக்கல பிரிவின் கீழான முதல் தகவல் அறிக்கை எக்ஸ்பிரஸ் எப்.ஐ.ஆர் என்றால் சரிதான். சான்று பொருட்களையும், சான்றாவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்வதற்காகத் தான் இந்த காலதாமதம் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்ததாக குறிப்பிடப்படும் அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனைத்து அத்தாட்சிகளிலும் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்த கையிருப்பு பொருட்களை வைத்து இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் போலீஸ் பார்ட்டியில் யார், யார் இடம் பெற்றார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தோட்டாக்கள் கம்பெனி தோட்டாக்களா? அல்லது கட்டு தோட்டாக்களா? என்று அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான். கரிமருந்து மற்றும் ஈயரவைகள் மலைக்கிராமங்களில் சாதாரணமாக கிடைக்கக்கூடியவை என்றால் சரியல்ல. ஒவ்வொரு எதிரிகளிடமிருந்தும் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிகளை தனியாக மூடி, SHO சீல் வைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை நிலையத்திற்கு கொண்டு வரும்போது, நிலைய பாராவிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல. போலீஸ் நிலையாணையின் படி வழக்கு சொத்துக்களை பாராவிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்றும், அவ்வாறு ஒப்படைக்க வேண்டிய தேவை இல்லை என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட வெடி பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்பது என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைத்து உரிய உத்தரவு பெறுவதற்காக நிலையத்தில் வைத்திருந்தேன். சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்ட அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. படிவம் 91, 04.08.2017 ம் தேதியன்று நீதிமன்றத்தால் திருப்பப்பட்டு, மீண்டும் 17.08.2017 ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் அந்த பொருட்கள் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்று

என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல. அது நிலைய பாதுகாப்பில் இருந்தது. நிலையத்தில் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்றால் அது நிலைய பாதுகாப்பில் இருந்தது. எதிரிகள் ஏசியதால் எனக்கோ, மற்றவர்களுக்கோ அவமானம் ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். நான் அன்றைய தினம் எந்த பணிக்கு சென்றேனோ அந்த பணியை ஆற்றி விட்டேன். ஆனால் அரசு வேலையை செய்வதை தடுத்த குற்றத்திற்காக இதச பிரிவு 353 சேர்க்கப்பட்டது. எதிரிகளை சோதனை செய்ய முற்பட்டபோது, அவர்கள் தடுத்தார்கள். எதிரிகள் சோதனையை தடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் துலங்காது என்றால் சரிதான். மிரட்டியதாக துலங்கும். எதிரிகளின் கையில் துப்பாக்கிகள் இருந்ததாக சொல்லப்பட்ட போதும், தங்களுடைய குற்றமுறு மிரட்டலை நிறைவேற்றும் வகையில் எந்தவொரு காரியத்தையும் செய்ததாக துலங்காது என்றால் சரியல்ல. இது புள்ளி விபரக்கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. 1முதல் 4 எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 5 மற்றும் 6 எதிரிகள் சம்பவயிடத்தில் இருந்ததாக என்னுடைய புலன் விசாரணையில் துலங்காது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.